உ

கணபதி துணை.

சிவமயம்.

திருநெல்லையந்தாதியும்

திருக்கொற்றவாளீசரந்தாதியும்.

இவை

ஸ்ரீ சமிவன க்ஷேத்திரமென்னும்

ஸ்ரீ கோவிலூர்மடாலயம்

ஸ்ரீமன் முத்திராமலிங்க ஞானதேசிகர்

ஆதினத்திற்குரிய

ஸ்ரீவீரசேகரஞானதேசிகர் பாதசேகரராகிய

ஸ்ரீ சுப்பைய சுவாமிகளவர்களால்

இயற்றப்பட்டு,

ஷை ஸ்ரீ வீரசேகரஞானதேசிகர் மாணாக்கருள்

ஒருவராகிய காரைக்குடி-

ஆ. வெ. வெங்கடாசலச்செட்டியாரவர்களால்

சென்னை,

கோமளேசுவரன்பேட்டை,

சச்சிதானந்த அச்சியந்திரசாலையிற்

பதிப்பிக்கப்பட்டன.

1910.

உ

கணபதிதுணை.

சிவமயம்.

திருநெல்லையந்தாதி.

விநாயகர் வணக்கம்.

கட்டளைக்கலித்துறை.

சீரச் சடமக தேவருந் தேடுந் தெருட்கரியே
யீரச் சடமுடி யெந்தைநின் றுடொழு தேத்திநின்பாற்
சேரச் சடமக மற்றகண் டானந்த சேதநமாய்
நேரச் சடமறு நெல்லையந் தாதி நிகழ்ந்திடுமே.

நூல்.

சிதம்பர வாரியு றுந்திருக் காசியைச் சேரினுமென்
சிதம்பர வாசமு தற்பல வானுமென் செய்நினதாஞ்
சிதம்பர வாரிய னன்கரு ணீணெறி சேரினல்லாற்
சிதம்பர வாழ்வடை யும்பரி சேயிலை சீர்நெல்லையே. 1

நெல்லையென் னோர்திரு நாமந் தனைநித நெஞ்சி னுற்றே, யில்லையென் னுதினி தீவையென் றேநினை யிங்கடைந்தேன், கல்லையென் ஞோர்வறுந் தீயினைத் தீர்த்தினிக் காண்பரிய, தில்லையென் னோர்தரச் செய் திடப் பேரருட் டேவியம்மே. 2

அம்மஞ் சருகர மாதங்க மீன்ற வரும்பிடியே
யம்மஞ் சருகுனைத் திவனத் தேயக மாயடைவான்
கம்மஞ் சருகுண வாகியுன் றுடொழு கக்கடவேன்
பொம்மஞ் சருகலை யேகவெற் பார்த்துப் புரந்தருளே.

அருளட்ட மூர்த்தியு மாயநின் றாட்சில ரானநல்
லார், பொருளட்ட மாநிதி யீயெனப் பேணிப் புகழுகிற்
பார், தெருளட்ட மாகுணத் தேனையும் யானெனத்
தேறுகிற்பா, னிருளட்ட மேயெனக் கீதியென் பேணி
ன்ன தின்னருளே. 4

இன்னம் பயிலன நாணவைப் பார்க்குள மேங்கல
ல்லா, னின்னம் பயிலன நாரசச் சேவடி நேருகில்லே,
னென்னம் பயிலன னேகநல் லோருற வென்னசெய்
வேன், மன்னம் பயிலனல் வேல்கொண்டெ னீள்பவ
மாய்ப்பதென்றே. 5

என்றுன் படிதலை யின்றியொன் றாயெனை யேங்க
வைக்கும், பொன்றுன் படியிக ழுந்தவத் தோர்புகழ்
பூன்றவொன்றா, நன்றுன் படிவம தாகுமத் யானத்தை
நானடைவா, னென்றுன் படிதொழு தேத்துமின் சீரடி
யெண்ணுவனே. 6

எண்ணும் பரம்பர வின்புமொன் றேவெனு மின்
பமன்றே, நண்ணும் பரம்பருஞ் சாலியைக் காத்தநென்
னாயகியைக், கண்ணும் பரம்பரைக் காதியைத் தேடி
டக் காரைசெல்ல, வெண்ணும் பரம்பரைச் சோதியைப்
போற்றுவ னென்றுகண்டே. 7

கண்டங் கரியவர்க் கக்கரு ணாயுனைக் கண்டதொ
ண்ட, ருண்டங் கரியவ ரிங்குமுத் தீசரென் றோதிடு
வர், பண்டங் கரியவர் நேடியும் பார்க்கப் படாதவராங்,
கண்டங் கரியவர் போற்றுமெந் தாயெனுங் கார்நெலம்
மே. 8

அம்மா தவத்தைய மின்றிநின் றார்க்கன்பை யாற்
றகில்லா, திம்மா தவத்தைய கோமன்னி யேயுழன்
றின்னலுற்றுப், பொம்மா தவத்தைதம் முட்சித்த நித்
தமிப் பொங்கருள்ளே, சும்மா தவத்தைநன் றென்று
ஞற் றாநிற்பல் சோதியுற்றே. 9

உற்ற வருக்கரு ளும்பரஞ் சோதியென் றொன்ற
மன்றா, டுற்ற வருக்கரு ளைத்தருந் தேவருக் கோது
செங்கை, யூற்ற வருக்கருங் காரணற் றாயுமை யுன்பத
ம்போ, தூற்ற வருக்க ருரைப்பதைக் கேட்டிங் குவக்க
வையே. 10

உவக்குமந் தாகினி நின்னருட் சீர்த்திகண் டுள்ள
மஞ்சத், திவக்குமந் தாரைதந் தோங்கிடுஞ் சோலையுட்
சென்றுநன்று, சிவக்குமந் தாளெனிச் சென்னியிற்
சேர்க்குமத் திங்களுண்டோ, பவக்குமந் தாகிநற் றீவ
னத் தேவளர் பண்ணவியே. 11

பண்ணவ மாக நினைத்தினம் பாடவின் பாலளித்த
தண்ணவ மாகரு ணைக்கிணை யேயிலித் தாரணியி
லெண்ணவ மாகத் தினுந்தினந் தேடினு மில்லையில்லைத்
திண்ணவமாகழ னிக்கிறை வியெங்கள் செல்வமுத்தே.

முத்தே வருந்தினந் தோத்திரம் பாடியெம் மூல
மென்னுஞ், சித்தே வருந்தினன் றாதுகுஞ் சேவடி
சேர்ப்பதென்றோ, சத்தே வருந்தினன் றாயாச் சகத்
தினைத் தந்தநல்ல, வத்தே வருந்தினஞ் செய்வினைக்
கான்றொளிர் வன்னியன்னே. 13

வனிவனம் பூவளி கம்மிய மானன் மதியிரவி,
வனிவனம் போலவை யொன்றுநன் னான்மறை வாழ்த்து

நன்ற, வனிவனம் போகம தேகவத் தேவியை வாய்ப்ப வுன்னி, வனிவனம் போய்த்தவ மாற்றுவம் வாருநன் மாதவரே. 14

மாதவத் தேவர் துதித்திடுங் கீர்த்தி மரகதத்தை, யோதவத் தேவருங் காணுகில் லோமென்னு முண்மை தன்னைக், காதவத் தேயருட் டேசிகன் கூறுங் கதிவழித் தாய்த், தீதவத் தேசெலுந் தியனுஞ் சேரத் திகழ்ந்த தின்றே. 15

இன்றென்றல் வீசுறுந் திவனத் தேயுநெல் வீசி யெற்கே, நின்றென்ற னுடுறும் போதினற் றீதினு நெஞ் சகத்தே, நன்றென்ற லாதியிந் நாமத்தி னோடுரு நாட் டமற்றிங், கென்றென்ற லாதிகட் கேகசித் தாவனிங் கேதமற்றே. 16

ஏதமற் றுனுல கைப்படைத் தாயுனை யென்று மின்பா, லேதமற் றுவறத் தோத்திரம் பாடவெற் கேயருள்வாய், சீதமற் றுதபத் தேசுமற் றேதவஞ் சேர்ந்திடுங்குன், றுதமற் றுரொடுங் கூடவைத் தே யென்னை யாண்டவன்னே. 17

ஆண்டவ ரென்புத் திரரிரண் டேயுனக் கன்றியம் மே, யாண்டவ ரென்புத் திருமுண் டாலங் கவர்பதத் தைப், பூண்டவர் தம்பதம் பூண்டவர் தொண்டனும் போற்றுகின்றேன், றுண்டவர் பங்குறுந் தாயே யுன தரு டாவெனக்கே. 18

எனக்கு மணியணி தேவனைக் கூடியிங் கின்றதெ ன்றே, கனக்கு மணியணி மாதநென் னையகி காயுகில்

லேன், சினக்கு மணியணி யாலயஞ் சேவிக்கச் சென்ற வென்றன், மனக்கு மணியணி யுன்பாதம் வந்து மருவு றினே. 19

மருவத் தினமன மங்கையர் கொங்கையை மாயுமன்றி
யருவத் தினமன மென்னவுண் ணேனந்த வந்தவந்தோ
வெருவத் தினமன மென்றதட் டாமுனம் வீசுமுன்ற
னுருவத் தினமன மன்னவன் னேயென்னை யூன்றவுன்
[னே. 20

ஊன்றற் கருகரி யாகியெல் லாவுல குக்குரியாய்
தோன்றற் கருநம வாகனச் சூரனைத் தூளெழுப்ப [ன்
லென்றற் கரியெனு மென்னிருட் பாவிலென் றேவினவி
வான்றற் குறுதுய ரீருமம் மேயென் வழங்குவையே.

வழங்குவென் றூலெனக் காரருட் சித்தி வழங்க லெங்ஙன், றழங்குநின் றாளிணைத் தாமரைப் போதி னைத் தாளுகில்லேன், கிழங்குதின் றுயினும் மாதவந் தேர்ந்து கிடக்குகில்லேன், முழங்குமன் றூடுநந் தேவ னுக் கேற்றநன் முக்கணியே. 22

முக்கண் டவன்முரா ரசக னன்முகன் மூலமென்னு
மக்கண் டவற்றற யானறிந் தேயுனை யம்மகமாய்
நெக்கண் டவமுய லாதிருந் தேன்றிரு நெல்லெனம்மே
திக்கண் டவரிசை சேரவன் றேபவஞ் சென்றதுவே.

அதுவண்ட மெண்டிக்கு மேவியிங் காமங்க மாவ தற்காய், மதுவண்ட மண்டுன்பு தீர்தடத் தேயுள்ள மாசதற்று, முதுவண்ட வந்தனைத் தேற்றுகில் லேன் முத்தி மோகமுற்றேன், புதுவண்ட மார்ந்தபைந் தார ணிந் தோங்குநெற் போதவன்னே. 24

போதந் தருதிரு நெல்லையம் பாள்பதம் போற்றுமின்காண், மாதந் தருதிரு தந்துவந் தாளுவண் மாநிலத்தீர், மாதந் தருதிரு பாவதித் தாய்மன்னு மாதவத்தாற், றீதந் தருதிரு மாறுசெய் வாளருட் சிந்துவன்றே.

சிந்துவந் தாரையுங் காதிட்ட தீவிடந் தின்றுள்ளங்க, சிந்துவந் தாரையுங் காந்தளின் சீர்கரஞ் சேர்த்திமுத்தஞ், சிந்துவந் தாரையுங் காங்கயன் சீர்த்தியுஞ் செப்பிநிற்பல், சிந்துவந் தாரையுங் காதலிப் பாயருட் சீர்நெலம்மே. 26

மேம்பட் டவர்புகழ் வீரநற் சேகரன் மென்மலர்த்தா, ணேம்பட் டவர்கழ லேதொழு வானருணேக் குளுற்றத், தேம்பட் டவரனு ணக்களித் தேதுயர் தீர்கவென்னச், சேம்பட் டவருண வியுமன் னேபதஞ் சேர்ந்தனனே. 27

தனதத்த தானவைங் கோசங்க ணீங்கிநற் றூரகமாந், தினதத்த தானவின் சோதியைத் தானெனச் சேர்ந்துமெல்ல, மனதத்த தானதன் ஞனந்த மோனத்தின் மன்னிநிற்பா, ஹனதத்த தானநெற் றுயெனக் கேயன்றி யுண்டுகொல்லோ. 28

உண்டண்டம் யாவினு முட்புறம் பேநிறைந் தோங்குமொன்று, கண்டண்டர் போற்றிடக் கூவினில் யாவருங் கண்களிப்ப, வண்டண்ட கோதினம் பாடிடுஞ் சிர்த்தநல் வல்லபத்தே, திண்டண்ட ராநின்ற கோவிலுட் டாயெனச் சேர்ந்ததன்றே. 29

சேருஞ் சிறப்பொடுங் கல்வியு ஞானஞ் சிறந்தவன்பாற், றேருஞ் சிறப்புறுஞ் செஞ்சடைத் தேவனுங்

தேடுகின்ற, வாருஞ் சிறப்பறச் சாலியம் பாள்பதக் கன்
புமிக்காற், சாருஞ் சிறப்புறும் வேலையுற் ருழ்தலுஞ்
சார்தலின்றே. 30

இன்றே யெனக்கரு ளீதியென் றோதுவ னின்னெ
லன்னே, மன்றே யெனக்கு மதியெனத் தேய்ந்திடை
வாடநல்குங், குன்றே யெனக்குய மும்மையம் மேயிக்
குவலயத்தே, நன்றே யெனக்குண மியாவையுந் தீயனு
நண்ணுதற்கே. 31

நண்ணும் பரம்பொரு ளென்றெனக் கேநல்கு
நாயகிநீ, யெண்ணும் பரம்பொரு வேல்விடந் தீயெம
னென்னமன்னுங், கண்ணும் பரம்பொருப் பன்னவன்
வார்முலைக் கட்டுமெட்டும், பண்ணும் பரம்பொருந் தீ
தின்றி யேபன்னு பார்ப்பதியே. 32

பதிதந்த தாமுக மாமறைக் கோடியிற் பார்க்கி
லொன்றே, விதிதந்த தாயிட வீரநற் சேகர வித்தகத்
தோன், புதிதந்த தாமரைப் போதினைப் போற்றிப்
புகழுகிற்பான், றதிதந்த தாயன முண்ணுமன் னேபுந்தி
தாதருக்கே. 33

தருதியம் பாநின்ப தாம்புய மாமலர் தந்துவிட்
டாற், சுருதியம் பாவந்து நாவினிற் றோன்றிடுந் தோன்
றிவிட்டால், விருதியம் பாநிற்ப னின்பெருங் கீர்த்தியை
வீறியம்பிற், பொருதியம் பான்மன் மதன்றருந் தீய
தும் போகு மன்றே. 34

ஏசும்ப ராதியைக் காதுநின் கீர்த்தியை யின்னெ
லன்னே, பேசும்ப ராமுக னாயினும் பேருட் பேணு
வன்யான், வீசும்ப ராசக்தி வீரநற் சேகரன் வேண்டு

கின்ற, தூசும்ப ராதியர்க் கெட்டாத தென்சிரந் தோய்
தலுண்டோ. 35

தோயத்து வந்துவந் தித்துநைந் தேத்திடுந் தூய
நின்ற, னேயத்து வந்துவந் தத்தென்னு நீண்மறை
நேர்சொலிற்போற், றேயத்து வந்துவந் த்யானித்து
த்யானித்துத் தேனெலன்னே, காயத்து வந்துவந்
தோன்றிடுந் தீதினைக் காதலென்றே. 36

காதனந் தானங் கதிர்த்திடுஞ் சீர்வன்னிக் கான
கக்கே, காதனந் தாதுனிச் சேருமின் கார்வயற் காத்த
வன்னை, யோதனந் தானமக் கட்செல்வம் யாவையு
மோங்கவைப்பாள், சேதனந் தானென்னு மாதவர்க்
கேற்றவின் செல்வியின்றே. 37

செல்வந் தலைதடு மாறுமென் றேயருந் தேவிநின்னைச்
செல்வந் தலைசமி தாவமன் மாதவர் செல்வமென்ப
ரல்வந் தலையல னையவைம் பாற்சுமை யம்மவஞ்சி
வில்வந் தலைமிலைச் சும்பரன்போற்றிடும் வேதமின்னே.

வேதந் தருமரும் வாயா யனுதினம் வேண்டுகின்றேன்
மாதந் தருமர னாரா யணனுடன் மாதவரு
மோதந் தருமது பாதாம் புயமல ருன்னிமன்னத்
தாதந் தருமம தேகா தொழுகுதல் சாரவெற்கே. 39

சாரங்க மங்க மடையா துலகினிற் சஞ்சரித்தே
னாரங்க மங்க வரிவையர்த் தேடி யலறுகின்றேன்
சீரங்க மங்க மதுவாகி நின்றுந் தெளியுகில்லேன்
சீரங்க மங்க ளனுதங்கை யேபதஞ் சேர்தலென்றே. 40

சேரஞ்சு கஞ்சுவைத் தாடிடக் கேட்டுச் சிரஞ்சலிப்
போய், காரஞ்சு கஞ்சுகத் தோலுடைத் தேவனைக் காத

லிப்போய், நோரஞ்சு கஞ்செயச் செய்திடு நீதியென்
னீதியென்னே, யோரஞ்சு கஞ்சநல் லத்தனன் னே
யிங்ந ஞெதெனக்கே. 41

ஓதங் கயற்க ணுயர்பிடி வேடமி ஞெண்ணிறைக்கு
மாதங் கயற்கு மருளல்கொல் லோதயை மாசனுக்குத்
தீதங் கயற்க ணகலவைத் தேவரு டேனெலன்னே
மீதங் கயற்கொர் சிரமொழித் தான்பணி மேகமின்னே.

மேகம் படிதரு பொங்கருட் சேர்ந்திட்ட மெய்த்தவர்க
ளேகம் படியென வெற்கிசைத் தாரதை யேகவிட்டே
மோகம் படிமிசை யுற்றுழன் றேன்முத்தி மோதமுண்
மாகம் படியெழு நாவனத் தேமன்னு மாமணியே.[டோ

மாமுக னுக்கருந் தங்கையு மாகியம் மாசிலைவம்
மாமுக னுக்குயிர் நாயகி யாகியு மாவலற்கு
மாமுக னுக்கெழி லம்மையு மாயவிம் மாசொருவம்
மாமுக னுக்குற வாவதென் னேதிரு வாய்மலரே. 44

மலருங் கமலமு மங்கைய ரங்கையும் வாதுசெய்பு
மலருங் குழலொடு பாசியுந் தேனுறு மந்தடத்தே
பலருங் குறையற வேய்நெல்லை நாயகி பாதநித்த
முலருங் கடுவினை யாதலி ஞெதுமி ஞேர்ந்துணர்ந்தே.

உணரவ ரும்பொருள் யாவையு முள்ளத் துதித்ததென்
தணரவ ரும்பரந் தானுகி நின்று தவமியற்ற [றே
வணரவ ருந்தலை மாலையற் காய்வயல் வாங்கியன்று
கொணரவ ருந்திய தாயே யருளைக் கொடுவெனக்கே.

கோடுமன வன்பிணி யைக்கடந் தோர்வந்து
கோதறமே, விடுமன வன்புக ழும்பதத் தோய்பதம்

வேண்டினனீ, யிடுமன வன்புமிக் காருக்கு மோர்பய னேற்பவர்க்கும், வடுமன வன்புரி யாருக்கு மீந்தருள் வாமமின்னே. 47

வாமஞ் சரிதிரு நெற்றங்கை யேதினம் வந்துவந்துன்
றுமஞ் சரிதா வெற்களிப் பான்றமை தாணியற்றுய்
பூமஞ் சரியெரி யுற்றெனப் பூவையர் போகமுற்றே
யேமஞ் சரியெனை யாளலன் றேவளிக் கேற்றதம்மே.

ஏற்றங் கொடியுடை நாதனைப் பாதியி லேற்ற நெல்லாய்,காற்றங் கொடியிடை நாரியர்க் கூடிடக் காத லித்தேன், கூற்றங் கொடியிட லாமுன்ன மேனுமுன் கோமளத்தாள், போற்றங் கொடியிடு நாரெனச் சார்ந் தகம் போக்கலென்றே. 49

போக்கு வரவரு பூரண வுன்னைநற் புந்தியுள்ளே
யாக்கு வரவரை யஞ்சலென் றேயரு ளங்நெலன்னை
நோக்கு வரவறி வேயக மாயுற நோக்குதற்காய்
நீக்கு வரவரி நீள்விழி யிமய னின்மலியே. 50

மலிதந்த செல்வநற் சீர்வல்ல பத்தினின் மன் னெலன்னே, பொலிதந்த மொன்றுடைத் தேவனைப் போற்றிடப் புந்திதந்தா, எலிதந்த ருன்பதங் குஞ்சி யிற் கொஞ்சவெற் காக்கலென்றே, பலிதந்த வந்தரும் பாடலன் றுதலிற் பாலிநன்றே. 51

பாலிக்கு மண்ணலின் றங்கையென் றுயினும் பா னிறக்க, பாலிக்கு மண்டலிக் கங்கணர்க் கன்புற்ற பாட்டிபிட்டுக், கூலிக்கு மண்சுமந் தாருக்கு மாலையைக் கூட்டியன்றோ, சேலிக்கு மண்டிடுஞ் செய்யினைக் காத் திடச் சென்றதன்றே. 52

சென்றுஞ் சிறுமியர் மாயைதன் னூடனந் தேடி
நைந்தும், பொன்றுஞ் சிறையுறு மென்மனந் தீதிது
போதமுற்று, நன்றுஞ் சிறையளி பாடிடும் பாதத்தை
நண்ணவெண்ணி, யென்றுஞ் சிடவரு ளெற்களிப் பா
யெங்க ளோர்நெலம்மே. 53

ஏரந் தகனென யானிருந் தேயுமிங் கேநரர்க்கே [காய்க்
யோரந் தகனவின் யோகொன்றை யோதுவ ளேதனக்
காரந் தகனனை யாவருந் தேடிடுங் கற்பகத்தைத்
தாரந் தகனல வாலிங்க னம்புரி தாயருளே. 54

அருளுங் குருபரம் போதினுக் காளென்ன வாடலல்லாற்
றெருளுங் குருபரம் பத்தியுந் தீனனுந் தேடுகில்லே
னுருளுங் குருபரம் பைத்தடம் பாம்பிறும்புமருட்டு
மிருளுங் குருபரம் பற்றிட னையினுக்கென்றுகொல்லோ.

கோல்லமர் வந்துறி னுங்கலங் காதவக் கோவசிவை
நல்லம யத்தினி லேயொழித் தோன்றிரு நாயகியைப்
புல்லம னைப்பொரு மைந்தனை யீந்தவிப் பொற்கொடி
யல்லம றும்படி பாடுமி னேடுமி னாரியரே. [யை 56

ஆரிய மாமதி யார்தமி ழாமணி மாதியுமாம்
வீரிய மாமதி யாமுழ ளேயுறும் வீரிநெல்லை
சீரிய மாமதி திரவி நோக்கெனச் சேகரித்த
காரிய மாமதி தேனளி மாநகர் காணுமினே. 57

மின்னே யனையநின் மேனியின் மேலிரு மேரு
வந்தே, யென்னே யிருந்த தெனவிறை யேசவு மின்
புறுசி, ரன்னே யுனதிரு பாதங்கள் பாடிமிக் கன்புசெய்
யேன், கொன்னே கழிந்தது காலமிக் கோலமென்
கோநெல்லையே. 58

கோகன கத்துறை செல்விய ரேத்துநெற் கோமளமே
பாகன கத்திய பத்திய மீதவர் பாலினிற்பக்
கோகன கத்தென பாடலு நீசெவி கோடனன்றே
யேகன கத்திறை வீம தலைத்தமி ழின்பமன்றோ. 59

இன்பம் புலினுனி நீரெனத் தேரினு மிங்கிவற்றிற்
றுன்பம் பிணுகினு மேமனந் தூசுறு தூத்தமெத்து
மென்பம் பிணினனி தேனென நாடலி லேங்குமம்மே
பொன்பம் புரையறு பாதம தோதிமைப் போழ்தலெ
ன்றே. 60

போழும வித்தையைப் போழ்ந்தெறிந் தேசுத
போதனர்க, ளாழும வித்தையை நன்கடைந் தேதுய
ரச்சமற்று, ரேழும வித்தையை யேபொய்மை யேயுன்
னி யேக்கமுற்றேன், பாழும வித்தையைந் தீரைந்து
மேகநிற் பற்றவுன்னே. 61

பற்றற் றவர்பணி யும்பரை யேயுனைப் பற்றிநிற்றல்
வற்றற் றவமுயல் காயமைங் கோசத்தை வாரியெற்றல்
கற்றற் றவரற நூறம்மை யேயன்றிக் கார்நெலம்மே
மற்றற் றவறினை மாற்றிவைப் பாயிந்த மாசனுக்கே. 62

மாசுட லந்தெரி யாவணா மாசுச மாதிமன்னி
யாசுட லந்தனி னின்பினைச் சார்ந்தன ராசதற்றோ
ராசுட லந்தன னென்பெருந் தீமன மந்நெலன்னே
தேசுட லந்தனி யின்பசிந் தாடநிற் றேடலென்றே. 63

தேடத் திரிதரு மைந்தனன் றோதலைத் தேரு
கில்லா, தோடத் திரிதரு வென்னநின் றேயுருத் தோற்
றமித்தைக், கூடத் திரிதரு மென்னைநின் னுக்கிடக்
கோறவுன்னுந், தோடத் திரிதரு ணாந்தனைக் கூறுநெற்
றாயவன்னே. 64

தூய்மையும் வாய்மையுஞ் செய்மையெற் காமெ
ணிச் சொன்னெலன்னே, செய்மையென் றாயிடச் செய்
துவெங் காதலைச் சேர்சகத்தே,மாய்மையற் றாற்றிவற்
றாதசித் தேவடி வாகியென்றுந், தோய்மையற் றாயருந்
தாயுனைப் பாடலித் தொண்டனென்றே. 65

தொண்ட ரனுதினந் தோத்தரித் தேத்திடத்
தோழனுற்ற, கண்ட மனையநற் கோவிலுட் சார்தத்தை
கண்டுசொல்வீ, ரண்ட மளவிடு பைந்தத்தை காளடி
யன்குறையைத், தெண்ட முறுகுறை தீர்ப்பதன் றோப
யன் றீஞ்சொலுக்கே. 66

கேத மதமனுக் கற்றலொன் றோபயன் கேள்சுகங்காள்
போத மதமனு மின்றவர்க் காநெல்லை பூவினுற்றான்
மாத மதமனு மன்றோட்டி டாப்பல மாந்துதற்கோ
சீத மதமனு முங்களுக் கேதருஞ் செல்லுமினே. 67

செல்ல லொடுபிறப் பார்தலைச் சீயெனச் செப்பு
கிற்பார்,செல்ல லனையசிங் காரவைம் பாலுடைத் தேவி
நின்சீர், சொல்ல லுறுமரும் பாடலைப் பாடிடத் தோம
னுற்றா, லல்ல லதுவல வென்றனக் கேயரு ளங்நெல
ன்னே. 68

அன்னமன் றானை யருநெல்லை யீசியை யார்வமிக்
கே, யுன்னமன் றாமன் ஞமலியைப் போற்றிரிந் துண்ட
ணைப்பா, னன்னமன் றாரி யவர்தமைத் தேடிவெட் கற்
றலைந்தாய், கொன்னமன் றாடி லெதுசெய்வை யோவு
ளக் கோகிலமே. 69

கோகில மேககண் றாரைவிட் டேகலிற் கூட்டினின்று
மாகில மாயைதற் காரியத் தேயிருந் தஞ்சியஞ்சி
மாகில மாகிநின் றாற்றுகில் லேமினி மாசதில்லாப்
பாகில மேதரு வானெல்லை யாள்பதம் பாடுவமே. 70

பாடுவர் சிங்கள நீலியை மீயிடைப் பாவைதன்னை
வேடுவர் சிங்கரி மாயியை நெல்லையை வேதவைப்பை
யீடுவர் சிங்கநல் வாகனி யாகிய வீசிதன்னைத்
தேடுவர் சிங்கலி லாதவர் யாமினந் தேடிலமே. 71

இலமே யிருந்தறஞ் செய்யுகில் லேன்றுற வேய்ந்துமிக்க, நலமே புரிந்தில னல்லது வல்லவின் ஞானியல்லேன், மலமே யுறைதரு மாகத்தை யானென்ன மாயுகிற்பே, னலமே தயையொடு மாரமு தீதியிந் நீசனுக்கே. 72

நீசம டந்தைய ராசையற் றேதிரு நெல்லெனம்மே
கோசம டந்தவி ரக்கொற்ற வாளிறை கோவினல்லூர்
வாசம டந்தனி லுற்றவின் வீரவண் மாதவர்க்கே
நேசம டந்துநி தந்தொண்டு யான்செய்ய நோவையே.

நேரங் கடத்தி யிடலென்கொ லோவரு ணெல்லெனம்
காரங் கடத்தி னுலவுநற் சீர்வன்னிக் கான்மயிலே [மே
பாரங் கடத்தி லகமென்ன னீக்கிப் பரம்பரமா
யாரங் கடத்தி னிடமதற் றுலென்ன வாக்குதற்கே. 74

ஆக்கற் கரிதுகொ லென்னையு நின்னுரு வந்நெலன்னே
வீக்கற் கரியென வாகத்தை யான்கண்டு வீடுதற்குப்
போக்கற் கரியெனு மாயையின் மாதுயர் போக்குதற்கு
மாக்கற் கரியுண விக்களித் தோன்மனை மாறங்கையே.

தங்க விலங்கலை யங்கரந் தாங்கிய தானுதன்னி
னங்க விலங்கலை யாதுறு சாலிநல் லாரமுதே
பங்க விலங்கலை யொத்தெளி யேன்படும் பாடறிவாய்
பங்க விலங்கலை யேலலொப் பாயெனைப் பண்ணலென்
றே. 76

பண்ணப்ப டாநெற் பரஞ்சுட ரேதினம் பாடி
நைந்தே, கண்ணப்ப தாறென நின்றுன்னை நாயனுங்
கண்டு கொள்ள, விண்ணப்ப மானதிங் கொன்றுண் டுன
திடம் வேண்டுகின்ற, கண்ணப்ப னூறு மன்பெனக்
கேதந்து காத்திடலே. 77

காத்தா யாதன மாதென்ன வேநின்று கார்வயற்பாற்
பூத்தா யுலகினை வாள்கள வாணியின் போகமுற்றே
நீத்தா யெனவுமுன் றன்னையின் றேசுவன் றீயனேநீ
பேத்தா யெனினுயர் முத்தியி லேமலை யீதிருவே. 78

திருவருந் தித்தனி யேதவ மாற்றிடச் செங்கமலந்
தருவருந் திம்மர்க ளாமைவென் னேறியுந் தாண்டுகின்
மருவருந் தித்தி மதுநதிப் பான்முந்தி வந்துதிக்கு [ற
மொருவருந் திக்கி னெல்லைநகர்ப் பாடிட வொண்ணலின்
[றே. 79

ஒண்ணக் கமலமி வாவி சிவத்துறு மொப்பினுக்
கென், றெண்ணக் கமலமு னக்கெனத் தேற்றுவ ரேய்
வனத்தே, யெண்ணக் கமலம தென்னவுற் றூர்க்குற்ற
வேர்நெல்லையாள், வண்ணக் கமலம துக்குடித் தாடு
மென் வண்டுளமே. 80

வண்டுண் டயர்தரு தேனதிப் பான்மதி மான்வ
னத்தே, யண்டுண் டமதுடை யானருந் தாய்நெல்லை
யாள்பதத்தின், றுண்டுண் டியர்பத மீவதற் கேயெனத்
தூயவர்க்கு, டுண்டுண் டுடுடென வேதங்க ளோதித்
துலக்குமன்றே. 81

துலக்கு மரியினைத் தீனெனத் தாவிடுந் தூய்குலத்தே
கலக்கு மரிசெறி தீவனத் தேவந்து கண்டவின்றே
நெலக்கு மரிவள தாமரைப் பாதத்தை நேரிலன்பால்
விலக்கு மரிசினி தந்தெழு நாவினில் வெந்ததென்னே.

வெந்தண விற்பல யாகம தாற்றிடும் வீரவண்மை
யந்தணர் வந்தனை செய்பதத் தாய்பத மார்ந்தவெற்கோ
ரந்தண ரும்பொரு ளீதரி ளருளை யாவெறுப்பா
ரந்தண ரம்பிர மன்புரி யார்வளிக் காரமுதே. 83

தேனே யனையது நின்றிருச் சீர்த்தியென் றேவிளக்கித்
தானே யனைமது வாறுதிக் கூடுநற் றுவிவிம்மு
மானே யனையினி வேய்தரப் போற்றிடி னஞ்சுகங்கை
மானே யனைவிழி யோதியுன் றுள்வந்து மன்னுமின்றே.

மன்னன் றனுவணி சோர்வழித் தாய்மகிழ் மாற னைச்செம், பொன்னன் றனுவணி நாயகன் போற்பதம் போற்றவையா, தின்னன் றனுவணிக் கோரிடங் காரையிற் கேகியில்லீ, கன்னன் றனுவணி னிங்குறச் சேர்த் தெனைக் காத்தனையே. 85

தனையரு ளற்புத நெற்பரை யேயுனைத் தாழ்ந்துநின்ற
தனையரு ளற்பல மெய்ப்படு மாசது தாவினங்க
தனையரு ளற்பமி தொப்புற றுய்கடன் றுனறிந்தென்
றனையரு ளற்புடன் முப்பொழு தேயுறத் தாயருணீ.

நீமுத் தனமுற வேங்கழ்ந் தாய்திரு நெல்லெனம்மே
யாமுத் தனவிரு மைந்தருக் கூட்டிட வாமிரண்டு [ன்
மீமுத் தனுமிவ னென்றுல கேத்திட வென்றனுக்கொ
ரேமுத் தமியுன தாட்பணிந் தேனுள்ள மோடுநின்றே.

ஓடரி தங்கம தொப்புறக் காண்கின்ற வொண்ட வத்தோ, ரூடரி தங்குற ளையனு மோயென வோவு ரைப்பா, ராடரி தங்குர லார்தடத் தாயரு ளாரமுற் பேர்க், காடரி தங்கம முங்கிளி யேயளிக் கார்கடலே.

காரித் துலைதுடை கிணடைப் பானின்ற காமியனும்
வாரித் துவரித மெல்லையம் மேபதம் வந்தடைந்தேன்

றேரித் துரிசற வாழவைப் பாயெனிற் றேட்டமற்றே
பூரித் துறுபுர ணத்தின்ப மாவனற் போதமுற்றே.

போதந் திரமுற வோர்வடி வாகிப்பூ விலுற்றுத்
தீதந் திரமம தேகருள் வீரநற் சேகரன்பொற்
பாதந் திரணன மாதினம் போற்றிடப் பாதிகொற்றன்
மோதந் திரளுற வியுநெல் லாயருண் மூடனுக்கே.

மூடத் தனமற லேற்றுவப் போடழன் மோசனஞ்செய், தாடத் தனமரா பேணெல்லை நாயகி யார்பதத்தைத், தேடத் தனமனை யாதிய வாவறத் தேடுகில்லாய், கூடத் தனமல வீசன தாம்வித்தை கோடலென்றே. 91

கோடந் திடமுட லைக்குறி யாகின்று கோகனகம் [றே
வாடந் தியினினும் வாடினைந் தேனனை வாடலென்
தாடந் திகழ்தர வென்மனத் தேதந்த சாலியன்னை
யோடந் தினகர னுண்ணுழை யாவன மோதுமினே.

ஓதும் பலமிலை யேசிவை யாவையு மோதலற்றே
வாதும் பலமிலை யென்றொழித் தேவன்னி மாவனத்திற்
போதும் பலமிலை கொண்டெழுந் தீயினைப் போக்கினென்னன், மாதும் பலமிலை யீபதக் காந்தவ மன்னவுன்னே. 93

உன்னதி வந்துற வேட்டலொன் றேயன்றி யுற்றதற்கா, மன்னதி வந்தில னுவதெவ் வாறினி யாலமுண்டோன், மன்னதி வந்தனை செய்பதத் தாய்வன்னி மாவனத்தா, யென்னதி வந்தரை யாதியி லென்றெண வெற்கருளே. 94

ஏற்கரு ளேற்கரு ளென்னலல் லாலுன்னை யெண்ணலில்லேன், புற்கரு ணேசமு மற்றொழி யேனிழி

போகமென்றான், மற்கரு ஞானியை யொத்துழல் வேன்வன்னி மாவனத்திற், கற்கரு மெய்யறி வைக் கற்று ளார்புகழ் கான்மயிலே. 95

கானகத் தேவருந் தித்தவத் தார்ந்தனற் காத லற்று, ரூனகத் தேவருந் துன்பத்தை யின்பெனிங் கோடினைந்தேன், வானகத் தேவருந் தேடிநன் றேவரும் வல்லபத்தாய், நானகத் தேவருந் திக்கென்ன வாழ்தலு நன்றுகொல்லோ. 96

கோல்லுங் கொடுவிழி யுங்குன்ற நேர்வருங் கோ டனமு, மல்லும் பகலினு மென்மனத் தேவந்து வந்த வந்தோ, புல்லும் படுதுயர் சொல்லவற் றேவுனைப் போந்தனன்யான், வெல்லும் படியருளந்நெலன் னேயு யர் வேதமுற்றே. 97

முற்றுஞ் சமவறி வாமெனிற் போகமு மோகமெங்கே யெற்றுஞ் சடவுரு மற்றது மிங்கெழ லெங்குறுங்கே ழுற்றுஞ் சமுதுரு வாயதி னின்றிட வோமுறைத்தே யற்றுஞ் சருதுரு மாரியை யீநெலை யாயருளே. 98

ஆயே னருமறை மாமுடி யென்னினு மார்கழற் கே, நாயே னருகில னென்னினு மான்மன நாரியர்பா, லோயே னருவுத லென்னினு முன்மக னேநெலன்னே நீயே னருவரல் செய்குவை யோதரு ணின்மலியே. 99

நின்மல நிட்கள நித்திய நிச்சல நெல்லைபொற்று டன்மல மேயற வேதொழு வாரவர் தாமொழுதாற் புன்மல மாமுட னுனெனல் போயுயர் போதமுற்றுச் சின்மல மாரலி லோயலில் சேர்வர் சிதம்பரமே. 100

திருநெல்லையந்தாதி முற்றுப்பெற்றது.

கணபதிதுணை.

சிவமயம்.

திருக்கோற்றவாளீச ரந்தாதி.

சிற்சொருப மான சிவராச கட்கேசன்
பொற்சொருபம் போற்றிப் புகழவே—தற்சொருப
வாணை முகத்தா னரவிந்த மாகதியற்
றேணை யெனக்கின் றினி.

நூல்.

பூரணனே யின்பப் புராதனனே பொன்னளிசேர்
தாரணனே தந்தாயித் தாரணியின்—காரணனே
மன்னவா ளீச மகிழ்ந்த திருநெல்லை
கன்னமலை யென்னைமிகக் கா. 1

காரூர் மிடற்றானைக் கண்ணுதலைக் காணுமா
றாரூர்க டோறுநீ யுற்றுழன்று—பேருரும்
வன்னி வனத்தை வணங்கிலையா னெஞ்சகமே
யன்னவனைக் காண்ப தரிது. 2

அரிதா யமலதா யாரறிவா யொன்று
யுரிதோ லுடையானு மொண்சீர்—விரிதேனு
ராறே டுடையாருக் கன்பியற்று நெஞ்சகமே
மாறே டுடையார்க்கு மற்று. 3

மற்றுந் தொடர்ப்பா டெவன்கொல் பிறப்பறுக்க
லுற்றார்க் குடம்பு மிகையென்றிங்—கற்றூர்க
ளோதும் பெருமொழியை யுட்கொண்டு வன்னிவனத்
தாதியினை நெஞ்சே யறி. 4

அறிவே யெனதுருவ மாவா னடைந்தேன்
குறியேதோ யானறியேன் கூறாய்—பொறியோடே
யோட வெனினுள்ள மோயா வளிநிகர்நிற்
கூடவெனி னோவசையாக் குன்று. 5

குன்றாக் குடியர் குறத்தி மணவாளர்
கன்றாப் புதல்வருமக் காமாமா—மென்றாக்கா
னீயசியைக் கொண்டுவர னீதியே நீலிமலை
யாய்வயலைக் காப்பதுவு மாம். 6

ஆமோ வலவோவென் றையமுறும் பாடில்லை
காமாரி யாமென்னுங் கட்கேசன்—பூமாதண்
வன்னி வனத்தை வளம்படவே நீயடையி
னுன்னதிநன் குள்ளமே யுண்டு. 7

உண்டோ விலையோதா னொள்ளிடையின் னெல்
லைக்கென், றுண்டாம் பெரும்பீதி யுற்றோதான்-கொண்
டாய்நீ, நல்ல விடபான நங்கொற்ற வாளீச
வொல்லை யெனக்கே யுரை. 8

உரையா யசியுடையா யோகரமோ பாம்பை
யிரையா யரியாவை யேற்குந்—திரையாரு
றென்மாதுங் காதலரு நீங்கார் முரணென்றே
சன்மார்க்க சங்கரனா னாய். 9

ஆனா யுலகா யதனுண் ணுழைந்தனைநீ
வானேய் கடத்தின் வளனொப்ப—வேனோதான்
பேதத்தைப் பேசிப் பிறழ்ந்து திரிகின்றா
ரோதத்தை வாளோ யுக. 10

உகத்தொ லொடுமிகத்த லொன்றேனுந் துன்றா
திகத்தி லடிநாயே னின்பே—யகத்துறுமா.

செய்வாய் கழனித் திருநெல்லைக் கின்னமுதே
ஐவா ளிரதத்தா யான். 11

ஆனை முகனோ டாறுமுக னும்பானாய்
வானை முகனாய் வாளீச— வானையுகந்
தேறினாய் நெல்லைக் கினிய தவனாய்
பாறினா யென்னையினிப் பார். 12

பாராதி யெட்டாய்ப் பரந்து விளையாட
றோரா திருப்பார்க்குத் தெய்வமாய்க்—காரோதி
நென்னா யகியோடு நீகொற்ற வாளீச
பொன்னா லயமமர்ந்தாய் போய். 13

போக்கும் வரவும் புணர்வுமிலாப் பூரணத்தைத்
தேக்குந் திரமனத்துத் தென்முனிக்குத்—தீக்கானிற்
சாம முடிகாண்பார் சார்வான் வரந்தந்தா
யேமமுற நின்கருணை யே. 14

ஏதோ வறியே னினிவருவ தெந்தாயே
மாதே சனாய் மருவினேன்—றீதேதான்
செய்து திரிகின்றேன் சின்மயமாய் நின்றில்லே
னெய்துவதிங் கென்னே யினி. 15

இனியா யினுநாயே னின்னருளிற் சேர்ந்தாற்
கனியாதோ நின்னுள்ளங் கட்கோய்—பனியாலே
வாடுங் கமலத்தில் வாடியதிங் கென்னுள்ளங்
கூடுங் கருணையினைக் கூர். 16

கூரா ரிறைவாளைக் கொண்டுபணி கொண்டாய்முன்
னேரார் திருநெல்லைக் கேற்றோனே—வீரேசற்
கென்ன வியற்றிநீ யிந்நகரைத் தொல்லிலினு
முன்னதியாய்ச் செய்துகொண்ட தோ. 17

ஓங்காரத் துட்பொருளா யொன்று யமலமதா
யாங்கார நீங்கினார்க் காரமுதாய்—பாங்காக
நின்று னசிவீச னீங்காம லெங்கெங்கு
நன்றாய்ப் பணிந்திடவே நாம். 18

நாம வுருவெல்லா நங்கொற்ற நாதனைவிட்
டாமனுவு மில்லையவ னாணையெனிற்— பீமமுறக்
காய்வதுவு மாய்வதுவுங் காணிகர்த்த நெஞ்சகமே
தோய்வதுவு மாராரைச் சொல். 19

சொல்லாய் மடநெஞ்சே சொன்ன மலைவிலியைப்
புல்லாய்ப் புரத்தை யெரித்தானை—நெல்லாய்க்
கினியானைப் போற்று திருந்தாயே யென்னென்
னினியார்ந்து துன்பளிப்ப தே. 20

தேனார் கமலத் திரள்சேருஞ் செந்தடமார்
வானோர் பணிகழனி வாளீச—மானார்
மயலிற் சுழலாமன் மன்னிடுவா னீயுன்
புயலிற் கருணையவுன் போது. 21

போததனைப் போக்கப் புகல்வாய் பெருநூலாம்
வாததனை நெஞ்சகமே வாடாதே—தீதகலக்
கள்ளத் தனைத்தவிர்த்துக் கட்கேசன் கான்மலரை
யுள்ளபடி யுள்ளத்தே யுன். 22

உன்னவுன்ன வோடிவிடு முன்னுருவங் கட்கேச
வுன்னை திருந்தா லுணரலாம்—பின்னமிலா
நல்லாற்றை விட்டுவிட்டு நாயே னலைந்தேனே
சொல்லாற்ற லென்பயக்குஞ் சொல். 23

சொல்லிற் கடங்காத சோதியுனை வாதியர்கள்
சொல்லிற் கடங்கச் சொலவுறுத—னல்லெழிலா

ரம்பரத்தைத் திக்கா யணிந்த வசியீச
வம்பரத்தைக் கட்டலையொப் பாம். 24

ஆமோ வயின்றிடுதே லம்முகத்தெம் வாளீச
மாமா முகன்னீயு மற்றுரு—மாமுகனு
மன்னத்தின் பூரணியா ளாவியென வில்லாக்கா
லென்னத்தைப் பண்ணுகிற் பீர். 25

ஈராறை யையைந்தோ டீர்நான்கிற் கப்பாலாஞ்
சீராருங் கொற்றேசன் சேவடிக—ளோராமற்
கற்றுற் கலைகளையே கண்டார் நகையாரோ
பற்றூர் புரிவாரோ பார். 26

பாரோரும் விண்ணோரும் பற்றுப் பரஞ்சுடரைத்
தோராதே நெஞ்சே திரிந்தெய்த்தாய்—பேரேது
மில்லானே யென்றுலு மேற்றுனெங் கட்கேச
னல்லார் தொழும்பதமே நாடு. 27

நாடிகழுஞ் சோரமுற னன்கெனினென் னற்றுதாய்
தோடமுறென் றீமனதைச் சோரஞ்செய்—தோடிவிடு
நாயே னெவர்பாலு நாட்டே னுனதாணை
பேயென்பொய் பேசுவனோ பேசு. 28

பேச்சும் பொருளும்போற் பேதையொடு நீநின்றுன்
மூச்சும் விடப்படுமோ மோகத்தை - யோச்சமென
மற்றவர்கள் கொற்றேச மாகருணை நீபுரியி
லற்று விடலடியே னும். 29

ஆமோ வகிலத் தரும்போகி த்யாகிகடாங்
கோமா னுனையன்றிக் கொற்றேச—சிமானே
மாதுக்குப் பாதிகொடுத் தாடையென மாதிக்கை
தீதற் றுடுத்ததிரத் தே. 30

தேவாதி தேவன் றிருநெல்லை நாயகனற்
பூவார் திருவடியிற் போந்தக்காற்—சாவாதே
யோவ லெளிதென் றுயர்மா ளிகைமாட்டுக்
கூவி யழைக்குங் கொடி. 31

கொடிமேன் மலையிருக்குங் கொற்றேச ரூரி
லடியா ரதனருகே யாரார்—பிடியோட
வன்னம் பயின்றுவர வாவா குயில்பாடப்
பொன்னம் மயிலாடும் போய். 32

போயழைகான் மைத்துனனைப் பொங்கரவ நாணுயாத்
தேய்சருமங் கோவணமா யென்று—காய்கனுழற்
கண்டரியுங் கீழ்வீழக் காணுக்குங் கட்கேசன்
புண்டரிகத் தாணிதமும் போற்று. 33

போற்றுங் குமரேசன் பொற்றலையின் மேலேறி
யாற்றிற் கரமிட்டே யாகாவென்—றேற்றுகணிற்
காய்ச்சற்கோ கட்டழலுங் கங்கையதுங் கட்கேச
தூய்ச்சற் றணிந்ததுநீ சொல். 34

சொல்களனி லேகளமுந் தூய்சிரசிற் பெண்ணிடபா
னெல்லைமுகந் தோலிடையினோர்க்குத்—தொன்மலார்
சஞ்சேர்க்குஞ் சம்புசல பிந்துசல சஞ்சம்பா
லஞ்சாலம் போலவனு லா. 35

உலாவித் திரிதேனே யொண்பசுவா மோதே
னிலாகற் பகதருவோ நீள்கோ—னிலாவணியாய்
சிந்தா மணியோ சிறுகல்லா மென்றாலும்
வந்தார்க் குதவும் வளன். 36

வளமார் கருணையினல் வாரிதியாய் வாடா
வுளவாற்றல் பூரணமா யுள்ளாய்—களவாணீ

யென்று முங் காட்சியிணை யெற்கே னளித்திலையே 37
கன்றுத நெற்பெணின்கொண் கா.

காலிலியிற் றண்மதியிற் காணென்பிற் கங்கையினில்
வாலடலைப் பானெலையின் வார்முலையின்—மேலசியற்
கச்சம் பிரிய மசுசிசுசி கோரஞ்ச 38
மெச்சம்பந் தந்தானு மில்.

இல்லாண் மலைநீலி யின்றனைய ரின்றீன்பெண்
ணல்லாது வேறுநினைப் பார்ப்பில்லா—ரல்லலெனச்
சங்கரனே சங்கரனுய்ச் சங்யாசஞ் சார்ந்தக்கா 39
லிங்குரணி லிற்பேண லேன்.

ஏனோ விரக்கந்தா னென்பேரி னிற்கிலைதான்
வானோர் பணிகழனி வாளீச—நானோதா
னன்பிலனோ வன்பிலனே லன்பதனைத் தந்துநித 40
மென்புருகப் பாடவரமீ.

ஈயென்றே காட்டியிவ ணீர்பதினு றேரெயிறை
யீயென்று லீவாயோ வீர்வாளோ—யோயுளமாய்
நின்னுருவத் தேநின்று னீயருள்வா யாதலினு 41
லன்னவணஞ் செய்வா னருள்.

அருளே திருவுருவா மாரியனுர்க் கேவல்
புரியாது நெஞ்சகமிப் பூமீ—தருமாலுற்
றோடி யுழன்றிடுமா லோடா தருள்புரிவான் 42
வாடிருடும் வண்மையனே வா.

வாளா வனையுவதி வாளாயான் வந்ததலான்
மாளாத காதலினை மாய்த்துன்றன்—வாளீச
சித்துருவை யேநினைந்து சித்துருவே யாயிலனோர் 43
சத்துருவென் சித்தமதே தான்.

தானே யலதுசக சிவபரஞ் சற்றுமிலை
யேனே வறிந்து மிடர்கின்றேன்—கோனசியாய்
நின்னருள்சற் றில்லையதே நின்மலனே காரணமாம்
பன்னுகுடம் போலதிலே பால். 44

பாலே மதுரமதாம் பற்றிவிடிற் சர்க்கரையை
மேலே விளம்பலெவன் மின்வாளோய்—போலேகே
ணின்னை நினைத்தலதே நின்மலமா நேர்துதியே
னன்னயத்தை யென்சொலுவே னான். 45

நானே வசுசியெனி னன்காமோ வென்பாரங்
கானார் கசடனெனிற் கட்செவியென்—றேனாரோ
யென்னை யிகழாதே யின்னருடந் தாளுதியே
லுன்னதியுற் குண்டெனவே யுன். 46

உன்னை யலதொன்றை யுன்னேனே யிந்நாயே
னென்னை நினையாமை யேசலவோ—மன்னசியாய்
சென்னியா லென்றதனைத் தீரமறந் தாய்கொன்னீ
சென்னியா றென்றுடையாய் செப்பு 47

செப்பிடிலோ நின்சரிதஞ் சித்திரமாங் கொற்றேச
திப்பியவை ராகியுமாஞ் சேர்ராகி—முப்பிரிவேற்
கொண்டு நிராமயனுங் கொண்டும் பலியதனை
யண்டு மகேச்சுரனு மால். 48

ஆலநிழற் கீழேயா மாச்சரியங் கண்டோமே
சாலமிகப் பாலியரிச் சாயகனார்—கோலமிகுஞ்
சிட்டர்களோ சிர்க்கிழவர் செப்பிடலோ மோனமொழி
கெட்டவரா மையமதைக் கேள். 49

கேளுந் திருநெல்லை கேள்வனே யொன்றுரைப்ப
வாளின் றிருட்டில் வழக்கெடுக்கி—ளோபினைப்

பொல்லாத பொய்ச்சான்று போடில் வருகின்றேன் 50
வல்லை யெனக்கருள வா.

வாரா விடினும் வள்ளெல்லை நற்றாய்க்காய்ச்
சாரா துரைப்பேனச் சான்றதனைத்—தீரமுட
னீயருளா தேகிடினு னென்மா நினையாளோ 51
தாய்மனமுங் கல்லாமோ தான்.

தானே விளையாடத் தன்சங்கற் பத்தாலே
வானே முதலாய் வகுத்ததலாற்—கேனமுளா
யுண்டோ சிறிதேனு மோதாயெங் கொற்றேச 52
மண்டானன் றிக்குடத்தின் மாண்.

மாணார் மனோலயத்தை மாசற்றார் மன்னிடயான்
பூணா ரரிவையர்தம் போகத்தை—வீணதா
ணாடி யுழன்றேனே நங்கொற்ற நாதாகாற் 53
றாடி யெனவெற் கருள்.

அருளே யவயவமா மாகர்கா நாடர்த்
தெருளே திருவுருவந் தேரீர்—பொருளோர்துங் [யற்
கொற்றேசர்க் காதலினிக் கோண்மனமாம் வெம்பகை 54
றுற்றோரே பற்றார்பற் றோர்.

ஓர்கொம் புடையானே யோருருவா யிங்குற்றுப்
பார்கொற்ற நாதனைநீ பாங்கென்று—னோர்கொளுவீர்
பார்த்தேனே பார்த்தவனைப் பற்றிச் சுகோததியி 55
லார்த்தானே யங்தோ வவன்.

அவனே யிவனு மிவனே யவனுஞ்
சிவனே யிவையாவுந் தேரீர்—பவநோயற்
றார்வாளீ திக்கானி லாடும் பொருளீதே 56
பேர்வாழி சொல்லியிருப் பேம்.

பேமற்றோ நாமளவில் பேரற்றோ மற்றோமென்
ஞமற்றோங் கொற்றேசர் நாடுற்றே—யோமுற்றார்க்
கென்றும் பணிசெய்வோ மேமாறோ மேயுலகின்
மூன்றுன் பிணியிடைவோ மோ. 57

மோதப் பெருங்கடலே மும்மலையா ஞயகனே
யோதப் பெரிதருளு முண்மையனே—கோதற்ற
முத்தீசன் போற்று முளரிப் பதத்தோனே
சத்திவா ளோயெற்குத் தான். 58

தானே யுலகன்றிச் சத்தியமே சத்தியமே
யூனர் சிறிதிலைமற் றோர்வீர்நீர்—கோனசியோ
னன்னகரில் வீரேச ஞயேற் குரைத்ததிதே
யெந்நகர்க்கு மெட்டா திதே. 59

தேவாதி தேவனிவன் றென்கழனி வாளீசன்
காவார் வனிக்கானைக் காதலிமி—னோவாதே
தன்மயமே யாகித் தணர்ந்தே பிணமதியை
யின்மயமே யாகியிடு வீர். 60

ஈரார் கருங்குழலா ரீமக் குணபம்போ
லோரா ருடனுறவோ வூன்றியெனு—நேராரும்
வாளீசன் மாநகரில் வாழடியார் தாளிணையி
னுளாக நெஞ்சே யமை. 61

அமையாய் மடநெஞ்சே யங்கிங்கும் பற்றல்
குமையோ விதுவுண்ணக் கூறாய்—நமையாளும்
வீரேசன் கொற்றேசன் வெற்றிநக ருற்றேநற்
சீரா யளித்தமொழித் தேன். 62

தேனார் குணமார் திருச்சனகன் போலேமற்
றேனோ வுணரா யிடர்நெஞ்சே—தேனுறோன்

பாதம் பணிதருநற் பண்ணவனும் வீரேசன் 63
பாதம் பணிந்தென்றன் பால்.

பாலார் கடலினையப் பாலகனுக் கீந்தருளு
மேலாங் கருணையசி மேலோனே—நூலளவே
யாருமா றுண்ணறிவிங் கந்தா மரைநீர்போற் 64
போகுமே யன்பருளுன் போல்.

போலி யுலகிதனைப் பொய்யென்றே யெண்ணுமற்
கோலி யலைந்தேனே கோனசியாய்—பாலியென
நின்றுட் பணிந்தேனு னீயருளைச் செய்தெனையே 65
கன்றுக் கருணையினிற் கா.

காடுங் கடிவீடுங் கண்ணுரு மொண்ணுரு
மோடுங் கனகமதூஉ மொப்பாக—நாடுமவர்
வாழுங் கழனிநகர் வாளீச னேநினதாட் 66
டாழும் வரமெனக்குத் தா.

தாரணியென் சொல்லன்றித் தாரணியென் றுன்
றில்லை, பூரணிநெற் கொண்கனெனும் போர்வாளோய்-
தாரணியி, னின்பா லடைந்தாரே நேரா விதைநேர்வார், 67
மன்பா லடைவார்போன் மன்.

மன்னப் பெரியோர்கண் மாசிலா நிட்டையினை
யுன்னப் படுநீள்கா ரோதியரோ—டின்னட்பாய்ச்
சேர விரும்புஞ் சிறியேனை யாட்கொள்வாட் 68
சார விரும்புறுநா தா.

தாமரையைக் கண்டே தணந்தார்நற் றையலர்த
மாமரிபர் ணம்புசிக்கு மாரியருங்—காமரியே
நன்னெய்பா லேகொள்ளு நாயேன் புலன்றுண்ட 69
லென்னயமார் கன்னுவா யே.

ஏசாத நிட்டை யிசைந்தானந் தக்கண்ணீர்
கூசா தயிலக் குறங்கமிசைப்—பேசாதே
வந்து ககங்கூடி வாஞ்ஞரூ மூண்டுகொலோ
தந்திரவாட் கொண்டருடா தாய். 70

தாயார் திருநெல்லைத் தாய்நீநற் றந்தைகணத்
தூயோர் கடவுளுநற் றோகையனு—மாயாத
சேட்டரா நின்னடியார் சேட்டமுறுஞ் சுற்றத்தார்
வாட்டமிலை வாளெடுத்த வா. 71

வாக்கு மனமும் வருந்தித் திரும்புறுநீ
போக்கும் வரவற்ற பூரணனீ—காக்குமெழிற்
காவலனற் கட்கத்தைக் கண்டுயிலக் கொண்டுவரு
மாவலனு நீயன்றோ வா. 72

ஆரார் பழித்தென்னு மாரார் துதித்தென்னுஞ்
சீரார் நினதாளே சேர்ந்தேன்யான்—கூர்வாளோ
யென்னைக் கருணைசெய னின்கடனு மென்கடனே
யுன்னைப் புகழுதலே யோ. 73

ஓயா துளப்பேய்தா னோடிப் படிமிசையே
வீயா மடந்தையர்மேல் வேட்கையுறுங்—கூயதனை
வேண்டா மெனவல்லார் வெற்றிவா ளோயுனையற்
றீண்டாரு மில்லையெனக் கே. 74

ஏதக் களஞ்சியநா னென்றாலு நின்றாளை
யோதக் கழியேனீ யோர்வாயால்—போதமருள்
வீரமுத்தி யாரியனை வேண்டிக் கொணர்ந்தருளக்
காரைசெலுங் கன்னியின்கொண் கா. 75

காலைப் பிடித்துங் கடுமனதைக் கண்டித்தும்
பாலைக் குடித்தும் பலபுரிந்தும்—வாலைமண

வாளனெனும் வாளனுனே வந்தடைவார் வந்தடையத்
தானைப் புகழுவன்யான் றன். 76

தானே பகையுறவுந் தானே சுகந்துயருந்
தானே யுருநாமத் தாரணியுந்—தானேதா
னெல்லா மெனவே யெளியேற் கியம்பினைவா
னல்லோய்பின் னுடுவதென் னன். 77

நானு விதவுயிரா நாதாநீ செய்பவனு
மூனு ரகமதியா மோதலெலாந்—தேனுறேய்
பேய்த்தேரே யென்றுரிய பேரின்ப மாயினபின்
னுய்த்தேயெற் கந்தோவா வா. 78

ஆக்க லளித்த லழித்தன் முதலவெல்லா
நோக்கின் மனமொன்றே நுண்ணசியாய்—வாக்கிற்கு
மெட்டாத நின்னுருவை யெட்டிவிடிற் சுட்டாதே
மட்டுண்டோ வின்பழியு மால். 79

மாலா யரனுய் மலரோனுய் மற்றவராய்க்
காலா யறநீயாய்க் கம்பாராய்—மேலசியோய்
மெய்யா யுனையல்லால் வேறிலேநன் னீநானே
பொய்யோது மோமறைதான் போய். 80

போயெட்டிப் பாராதே பொய்ம்மாயா வாதமே
னும், பேய்மட்டிப் பேதையுடன் பேசாதே—வாய்கட்
டிப், பொல்லா வுளமொருக்கிப் பூரணமே காணென்
றுய், கொல்லேதி யோயுனையென் கோ. 81

கோனு மதுமுனிவன் கோறவமே நற்றவமா
மானு றுனதுவர மாண்பேமாண்—பேனோர்க
ளென்ன வரம்பெற்று ரித்தகைய மெய்த்தவர்வா
ழின்னவாழ் போலோதி லே. 82

ஏமாந் திருந்தேனே யித்துணையு மையய்யோ
நீமாந்த வைத்திலையே நீளமுதைப்—பூமாந்தண்
வல்லபத்தி நாயகனே வந்திலையோ பக்குவமுங்
கல்லிபத்திற் கிக்களிப்போய் கா. 83

காவிற் சொரிதேனே கண்டோநற் றேனாருய்
மாவிற் குயில்கூவும் வல்லபமே—தேவிற்
சிறந்ததிருக் கட்கேசன் சோநகராங் கண்டீ
ரிறந்திடினு நீர்மறவீ ரெல். 84

எல்லாம் புலப்பந்தா னென்றுரைத்த முத்தீசன்
சொல்லாற் சுகம்பெறலாஞ் சோர்வின்றி—யல்லாமல்
வேறு வழியிலையெம் வெற்றிவா ளீசரைவிட்
டேறுங் கரையேது மில். 85

இல்லா தறிவான்மூன் றேய்ந்திருப்ப தேமுத்தி
யல்லாமல் வேறின்றென் றாரியனோர்—சொல்லாலே
சொன்னவுப தேசத்தைத் தோமறுநற் கொற்றேச
வின்னபடி யென்றிலக்கி டே. 86

ஏதக் கடவுடையோ ரின்னமுதீ வாரெனினு
மோதத் தலைமாலை யோரெனினும்—பூதரிவ
ரோதத் தருமோவிங் கோர்வாரார் கொற்றேச
ராதலெலாஞ் சித்திரமே யாம். 87

ஆமெனினு நற்பவனா யான்றோர் பவந்துடைப்பன்
காமனெரி கோடிட்டிக் காரணுமே—யாமெனினுஞ்
சீரார் சமதிருட்டித் தேவனிவன் கொற்றேசற்
சேரா ரறிவாரோ செப்பு. 88

செப்பேம் பவன்சருவன் சீரார் பசுபதியா
மொப்பா ருருத்திரனே டுக்கிரனும்—மெய்ப்பீம

னீசானன் மாதேவ னென்றருள்வா ளீசனுடைத்
தேசார்ந்த நாமமதின் சீர். 89

சீரார் கழனித் திருவே திருநெல்லைக்
காரா வமுதே யருளுருவே—தோராதார்க்
கல்லேயா மாதியறுஞ் சோதியனே யாழ்நெஞ்சே
யல்லும் பகலும் மறி. 90

அறிவுருவாங் கொற்றேச னுனைபினர் நோக்கச்
செறியுலகஞ் சித்துருவாய்ச் சேர்ந்தே—பொறியாறு
மோட லொழிந்ததுவே யோர்சாந்தி வந்ததுவே
கேடதற வுற்றனமிங் கே. 91

கேதாரா போற்றியொரு கேடில்லா விஸ்வேசா
தாதாவே போற்றி சயபோற்றி—யாதியிலாய்
போற்றி யசியீசனே போற்றிநெலை நாயகனே
போற்றியுன தாமரையின் போது. 92

போதா ரயனுடனே புள்ளோனுங் காணாத
தாதாவே சீர்கழனித் தண்ணிறையே—நீதாதா
நாயேற் குனைமறவா நல்வரத்தை நல்குதியேற்
பேயேற்கு முண்டோ பிணி. 93

பிணியார்ந்து மங்கும் பிணவுடலைப் பேயே
னணியா மெனக்கருதி யார்ந்தே—துணியாமற்
றேயாம னின்னுருவைத் தோத்திரமுஞ் செய்யாம
லோயாமற் றுன்புற்றே னே. 94

ஓகோ திருநெல்லைக் கொப்பான நாயகரே
ஆகாயம் போலகண்ட மானவரே—தேகோகம்
புந்தியினைத் தீர்த்தே புலையனையு மாட்கொளுவீர்
மந்திரவாட் கொள்பவரோ மா. 95

மாவும் வளர்தெங்கு மாகத்தின் சோலையாங்
கோவிற் பெருமூரோய் கொற்றேச—கூவியிடுங்
கோகிலமே போலமிகக் கூடிதனை விட்டொழித்திங்
காகிலனே நின்று ளணி. 96

அணியும் பணிபோற்றி யம்பலவா போற்றி
பணியு மடியவர்தம் பாதந்—துணிவாக
நிற்பாதி கொண்டதிரு நெல்லை வயற்கேகு
நற்பாதம் போற்றுவனே நான். 97

நானேநீ யாகிப்பன் னீயேயபின் ஞானகி
யூனே முதலாய தோட்டிமிக—வானேவா
ஞனவா போலரிய வையாவெம் வாளீச
வானோமே நாமிருவோ ரா. 98

ஆச்சரியங் கண்டோமே யம்மா வசியீசன் [தன்
பேச்சிறக்கப் பண்ணுவனே பேணினரைச்—சூர்ச்சடி
போற்றும் பதமதனைப் போற்றியிடும் வீரேசன்
போற்றும் பதந்தனையே போற்று. 99

போற்றிநங் கொற்றேசற் போற்றுவார் பொற்கழல்கள்
போற்றிநம் வீரேசன் பொன்மலர்கள்—போற்றிமிகப்
போற்றி கழனிநகர்ப் பொன்னடியார் பொற்றாள்கள்
போற்றிகரிப் பாதமரைப் பூ. 100

திருக்கொற்றவாளீசரந்தாதி

முற்றிற்று.

கணபதி துணை.

சிவமயம்.

ஸ்ரீசிருங்கேரியின்கண்ணெழுந்தருளியிராநின்ற

ஸ்ரீ சச்சிதானந்த சிவாபிநவ நாசிம்ம

பாரதி ஸ்வாமிகள்

ஸ்ரீகோவிலூர் ஸ்ரீவீரசேகர ஞானதேசிகரை

ஆசீர்வதித்த

ஸ்ரீ ஆசீர்வாத பஞ்சரத்தினம்.

அமரமங் கையராற் சூழ்தரு பவனு
மகிலமா விடயவா சையினைச்
சுமையெனத் துறந்தோ ரடைதரு பவனுந்
தூயயா ழுதனிறு லழகு
சமைவுறு கமல மலர்க்கரத் தினனுஞ்
சததமாஞ் சாரதாம் பிகைதான்
விமலநன் மதியை யீந்துகாத் தருள்க
வீரமா முனிவரன் றனையே. 1

கிருபையின் னமுத நிறைதரு கடலா
கியதிரு வாணியம் பிகையே
யொருசல மிலவை ராகமீந் தருளி
யுயர்பர மான்மக மான
திரமுறு மதியை யுளுற்றியே யருளிச்
சிவபெரு மான்றிரு வடியி
லருமையன் புடைய வீரமா தவனை
யன்புடன் காத்தரு ளுதியால். 2

கரையறு கருணை நிறைதரு கடலே
கருதரும் வாணியம் பிகையே
விரையுறு கமல நின திரு கழலின்
மிகுதிட பத்தியா மதையுந்
தருமம தியற்றும் பெருந்தவர் பெறுகத்
தகுந்திரு முத்தியா மதையும்
விரைவினி லமல மதியுள வீர
விசனுக் குதவியே யருள்வாய். 3

பொய்ம்மையாம் பொறிக டமைநிரந் தரமும்
பொலிவுடன் வெலும்வலி மையதுஞ்
செம்மையா மேனிச் சிவன்றிரு மாலா
தியர்களி னுலயா திகளைச்
செம்மையா யியற்று மாற்றலுந் தெளிந்த
செழுந்தவர் குழுவில்வாஞ் சையையு
மம்மையே கருணை யதனினல் வீர
வருந்தவற் குதவியே யருள்வாய். 4

தேசொடு தவமுங் குணங்களுஞ் சிறந்த
சிலமார்த் திலங்குமிங் கிவர்போன்
ஞசறு பவரா லனவர தமுமே
பரியவிம் மடமதும் விளங்கிப்
பேசுமெஞ் ஞான்று முலகினர் தமக்குப்
பெறும்பெரு முதவிபெய் குவதா
மீசன தருளா லனவறு கால
மிலங்குக ஜயமுடன் மாதோ. 5

ஸ்ரீ ஆசீர்வாத பஞ்சரத்தினம் முற்றிற்று.